

# உயர் கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண். 20

## அறிவிப்புகள்
## 2011 - 2012

உயர் கல்வித் துறை

மானியக் கோரிக்கை எண். 20

# அறிவிப்புகள்

# 2011 – 2012

## 1. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கணினி வழங்குதல்

அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தங்களது கல்லூரிப் படிப்பினை முடித்தபிறகு அவர்கள் எந்த துறையில் பணியாற்ற விரும்பினாலும் அந்த துறையில் மிகச் சிறப்பாக பணியாற்ற தற்போது கணினி அறிவு மிகவும் அவசியம் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு **23** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் **ரூ.319.90 இலட்சம்** மதிப்பீட்டில் கணினி வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் வாங்கப்படும். இதனால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பயன்பெறுவர்

## 2. அரசு பொறியியல் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

மாணவர்களின் வகுப்பறைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில், கீழ்காணும் 5 அரசு பொறியியல் கல்லூரிகளில் ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் 20 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் :–

| வ. எண். | கல்லூரியின் பெயர் | வகுப்பறைகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அரசு பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் | 4 | 30.00 |
| 2 | அரசினர் பொறியியல் கல்லூரி, சேலம் | 4 | 30.00 |
| 3 | அழகப்பச் செட்டியார் அரசினர் பொறியியல் கல்லூரி, காரைக்குடி. | 4 | 30.00 |
| 4 | அரசினர் பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி. | 4 | 30.00 |
| 5 | தந்தை பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரி, வேலூர். | 4 | 30.00 |
| | **மொத்தம்** | **20** | **150.00** |

### 3. பொறியியல் கல்லூரிகளுக்கு பேருந்து

மாணவர்களின் போக்குவரத்து வசதிக்காக, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடியிலுள்ள அரசு பொறியியல் கல்லூரிகளின் வளர்ச்சி நிதி மற்றும் சிறப்புக் கட்டணத்திலிருந்து, ஒரு பேருந்திற்கு ரூ.19.00 இலட்சம் வீதம் மூன்று பேருந்துகள் ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

## 4. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் வகுப்பறைகள் மிகவும் அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, கீழ்காணும் 8 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் 20 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் :–

| வ. எண். | கல்லூரியின் பெயர் | வகுப்பறைகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை. | 4 | 30.00 |
| 2 | அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கிருஷ்ணகிரி | 2 | 15.00 |
| 3 | அரசினர் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, மதுரை | 4 | 30.00 |
| 4 | தந்தை பெரியார் அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, வேலூர் | 2 | 15.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தூத்துக்குடி | 1 | 7.50 |
| 6 | சீனிவாச சுப்பராயா அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, புத்தூர். | 3 | 22.50 |
| 7. | அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, அறந்தாங்கி | 1 | 7.50 |
| 8. | டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை | 3 | 22.50 |
| | **மொத்தம்** | **20** | **150.00** |

## 5. தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆவணங்களை பாதுகாக்க சாதனங்கள் வாங்குதல்

சிப்பாய் புரட்சிக்கு முன்பும், பின்பும் தொடர்புடைய 1670/1899 ஆண்டுகளுக்குரிய ஆவணங்களை, பல்லவன் போக்குவரத்துக் கழக கலந்தாய்வுப் பணிகள் நிறுவனம் டிஜிட்டல் ஸ்கேனிங் செய்து அவற்றினை ஹார்டு டிஸ்க் மற்றும் மேக்னடிக் டேப் வடிவில் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு வழங்கியுள்ளன. இப்பணிகள் மொத்தம் 50 டெராப்பைட்டுகள் கொண்ட புள்ளி விவரங்கள் ஆகும். ஆனால் இந்த தரவுகளை பயன்படுத்த இயலாமல் உள்ளது. இந்த தரவுகளை ஆராய்ச்சியாளர்கள் திறம்பட பயன்படுத்தும் பொருட்டு, நெட்வொர்க் ஆக்ஸஸ் ஸ்டோரேஜ் பாக்ஸ்சுக்கு மாற்ற குறைந்தபட்சமாக 24 TB ஸ்டோரேஜ்–ம், தரம் உயர்த்தப்பட்ட 2.53 GHz server (processor) மற்றும் customized web based Retrieval Software with MSSQL data base-ம் தேவைப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு இவ்வாண்டு ரூ.23.00 இலட்சம் வழங்க உள்ளது.

## 6. அரசு பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமனம்

அரசு பொறியியல் கல்லூரிகளில் பல்வேறு பாடப் பிரிவுகளில் காலியாக உள்ள 154 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் இவ்வாண்டே நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் அரசு பொறியியற் கல்லூரிகளில் நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறை களையப்படும். கற்பித்தல் தரம் மேம்படும்.

## 7. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமனம்

அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் காலியாக உள்ள **139** விரிவுரையாளர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் இவ்வாண்டே நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 8. அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் பணிநியமனம்

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 1025 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் இவ்வாண்டே நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை என்ற நிலை மாறும். ஆசிரியர்கள் பற்றாக்குறை களையப்பட்டு கற்றல் தரம் மேம்படும். வேலைவாய்ப்பும் பெரிதளவில் பெருகும்.

## 9. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கையின் விகிதம் கணிசமாக உயர்வதை கருத்தில் கொண்டு மாறிவரும் காலச்சூழல்களுக்கு ஏற்ப தேவையின் அடிப்படையில் புதிய பாடப்பிரிவுகளை துவங்க இந்த அரசு முடிவு செய்து, முதற்கட்டமாக, 34 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் இக்கல்வியாண்டு முதற்கொண்டு துவங்கப்படவுள்ளது. இதனால் உயர்கல்வி மொத்த சேர்க்கை விகிதம், 2025ஆம் ஆண்டு குறியீட்டை முன்னமே அடைய வழிவகை ஏற்படும்.

**பி. பழனியப்பன்**
உயர் கல்வித் துறை அமைச்சர்